Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, SEPTEMBER 17, 2021

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 17, 2021 | ஒளி: 07 கதிர்: 103 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# பிரதமர் அலுவலகம் விளக்கம்

கெக்கிராவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பிசோதகர் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் பல்லபெத்தே நந்தரதன தேரர் பிரதமரின் ஆலோசகராக பதவி வகிப்பதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவையாகும் என பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

அநுராதபுரம் சிறைக்குள் செல்ல

# தமிழ் எம்.பிக்கள் இருவருக்கும் அனுமதி மறுப்பு

■ செ.கீதாஞ்சன்




அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்காக நேற்று (16) சென்றிருந்த சட்டத்தரணிகள், தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# நான் கவனிப்பேன்



அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்று (16) சென்றிருந்த இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அங்கிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுடன் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

சந்திப்பு நிறைவடைந்த நிலையில் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் கீழ்கண்டவாறு பதிவொன்றை இட்டுள்ளார்.

'என்னைச் சந்திக்க கைதிகள் குழு விடுத்த வேண்டுகோளின் பேரில், அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த, அநுராதபுரம் சிறைக்குச் சென்றேன்.

தொடர்ச்சி P2

# போதையில் ஆட்டம் போடுவோருக்கு அமைச்சு கொடுத்தால் இதுதான் கதி



நாட்டை முன்னேற்ற வேண்டுமாயின் தகுதியானவர்களுக்கு கட்டாயமாக வாய்ப்பளிக்க வேண்டும். அதைவிடுத்து குடிகாரன், போதைபொருள் காரன், அங்கே இங்கே துப்பாக்கியைத் தூக்கி ஆட்டம் போடுபவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கினால், நாடு இவ்வாறானதோர் இக்கட்டான நிலைக்கு முகம் கொடுக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# லொஹானுக்கு எதிராக முறைப்பாடு



சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாட்சியாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் தேசிய அதிகார சபையில் முன்னிலை சோஷலிச கட்சியால், நேற்று (16) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

அரசாங்கத்தில் எந்தவொரு பதவியை வகிப்பதற்கும்

# தகுதியே இல்லாதவர்

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு; பக்கச்சார்பற்ற விசாரணையை கோருகிறது

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கடுமையானவை எனத் தெரிவித்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

லொஹான் ரத்வத்தைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கடுமையானவை. ஆகையால் சிறைக்கைதிகள் தொடர்பிலான பொறுப்பில் இருப்பதற்கோ அல்லது ஏனைய பொறுப்புகளின் கீழிருந்து செயற்படுவதற்கோ, அவர் முற்றுமுழுதாக தகுதியற்றவர். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கும் அவருக்கு எவ்விதமான தகுதியும் இல்லை.

தொடர்ச்சி P2



# புரைக்கேறி உயிரிழந்த குழந்தைக்கு கொரோனா

## சிசுவை பிரசவித்த தாய் தொற்றால் மரணம்

■ எம்.றொசாந்த், செந்தூரன் பிரதீபன்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்த 15 மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தைக்கு, கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த ஒரு வயதும் 3 மாதங்களும் நிரம்பிய இந்தக் குழந்தை, புரைக்கேறிய நிலையில், நேற்று முன்தினம் (15), மந்திகை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்டதை தொடர்ந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

தொடர்ச்சி P2



மீண்டும் சூடு பிடிக்கிறது ஜி.எஸ்.பி சலுகை விவகாரம்

# இலங்கை வருகிறது தூதுக்குழு

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு எதிர்வரும் 27ஆம் திகதியன்று இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறது. அந்தத் தூதுக்குழு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என அறியமுடிகின்து.

இந்தத் தகவல்களை உறுதிப்படுத்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் ஜி.எஸ்.பி பிளஸ் கண்காணிப்பு செயல்முறையின் கீழ் ஒத்துழைப்பு குறித்து கடந்தமாதம் பேச்சுவார்த்தை நடத்தியது என அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் உயர்மட்டக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு, வடக்கு, கிழக்குக்கும் விஜயம் செய்யும் என்றும் தமிழ்த்தரப்பு அரசியல்வாதிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவை சந்திக்கக் கூடுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



# துஆ பிரார்த்தனை...

பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் 21 ஆவது நினைவு தினம் நேற்றாகும். கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த துஆ பிரார்த்தனை நடத்தப்பட்டது. (படஉதவி: முஸ்லிம் காங்கிரஸ் ஊடகப் பிரிவு)

# யாழில் பிறந்த யுவதி நோர்வே எம்.பியானார்



யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட ஹம்சாயினி குணரட்ணம் நோர்வேயில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிப்பெற்றுள்ளார்.

தனது மூன்று வயதில் குடிபெயர்ந்திருந்த அவர், 19 வயதில் அரசியலுக்குள் காலடி எடுத்த வைத்து, 27 வயதில் ஒஸ்லோவின் துணை மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

இலங்கை – காரைக்கால் இடையே

# பயணிகள் கப்பல் போக்குவரத்து

## புதுச்சேரி முதலமைச்சருடன் பேச்சு

இலங்கை மற்றும் காரைக்கால் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பது தொடர்பில் புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமியுடன் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2



உள்ளக பிரச்சினைகளை உள்ளே தீர்ப்போம்

# வெளிநாட்டு பொறிமுறை தேவையில்லை



நாட்டின் உள்ளக பிரச்சினைகளுக்கு வெளிநாட்டு பொறிமுறைகள் எதுவும் தேவையில்லை என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, அவ்வாறானதொரு பொறிமுறையை உருவாக்க ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு அதிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டிய அவர்,

தொடர்ச்சி P2



# கடும் கட்டுப்பாடுகளுடன் தளர்வா? இன்று தெரியும்

ஒகஸ்ட் 20ஆம் திகதி முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நீடிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்னும் சில நாள்களுக்கு நீடிக்கப்படுமா? அல்லது கடும் கட்டுப்பாடுகளுடன் தளர்த்தப்படுமா என்பது தொடர்பில்,

தொடர்ச்சி P2

# மகளிரை வலுவூட்ட அமெரிக்கா நிதியுதவி

நாட்டில் சிறு தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு உதவி வழங்குவதற்கும் மகளிரை வலுவூட்டுவதற்கும் அமெரிக்காவால் 40 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மக்களால் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நான் கவனிப்பேன்

குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் அவர்களை மறுவாழ்வுக்கு உட்படுத்தல் மற்றும் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட அவர்களின் பிரச்சினைகளை நான் கவனிப்பேன் என்று அவர்களுக்கு உறுதியளித்தேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழ் எம்.பிக்கள் இருவருக்கும்...

கொரோனா தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் கைதிகளை பார்வையிடுவதற்கு அனுமதிக்கமுடியாது. கொழும்பில் இருக்கும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சிடம் அனுமதி பெற்று தங்களுக்கு அறிவித்தால் கிடைத்தால் அனுமதிப்பதாக தெரிவித்தனர்.

அங்கிருந்து இராஜாங்க அமைச்சின் செயலாளாருக்கு தொடர்பினை ஏற்படுத்தியும் எந்த

**“ கொரோனா தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் கைதிகளை பார்வையிடுவதற்கு அனுமதிக்க முடியாது. கொழும்பில் இருக்கும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சிடம் அனுமதி பெற்று வந்தால் அனுமதிப்பதாக தெரிவித்தனர்**

பதிலும் கிடைக்கவில்லை. அதனால் திரும்பிவிட்டோம் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் அலுவலகம் விளக்கம்

நந்தரதன தேரர் தற்போது கௌரவ பிரதமரின் ஆலோசகராகவோ அல்லது வேறு எந்தவொரு பதவியும் வகிக்கவில்லை எனத் தெரிவித்துள்ள அலுவலகம் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# போதையில் ஆட்டம் போடுவோருக்கு அமைச்சு கொடுத்தால் இதுதான் கதி

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், லொஹான் ரத்வத்தையின் தந்தை பிரதி பாதுகாப்பு அமைச்சராக எம்முடன் கடமையாற்றினார். யுத்தக் களத்தக்கு வந்து செயற்பட்டார். அவரை நாம் மதித்தோம்.

ஆனால் இந்த நபரோ தனது தந்தையையே அகௌரவப்படுத்தும் ஒருவர். யுத்தக் காலத்தில் விடுதலைப்புலிகளின் பெயரைக் கேட்டாலே பயத்தில் ஓடி ஒளிந்திருப்பார். பயந்த சுபாவமுள்ள இவர், சிறைக்குச் சென்று 15 வருடங்கள் சிறையில் இருக்கும் முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் அப்பாவிகளை முழந்தாளிடச் செய்திருக்கின்றார்.

இது எவ்வளவு மோசமான செயற்பாடாகும். இது சண்டித்தனமான வேலையில்லை. உண்மையில் பயத்துடன் இருப்பவர்களே குடிபோதையில் இவ்வாறு செய்வர். குடித்து முடித்ததும் சண்டியராகி சிறைக்குச் சென்று தனது வீரத்தை காட்டுகிறார்.

எனவே, சிறையில் இருக்கும் கைதிகள் அனைவரும் இவ்வாறான நபர் ஒருவர் சிறைக்குள் வந்தால், கைதிகள் அனைவரும் ஒன்றிணைந்து, வரும் நபரின் எலும்புகளை உடைத்து, சுக்கு நூறாக்கி வெளியில் வீசுங்கள் என்றார்.

சிறைக்குள் துப்பாக்கியைக் கொண்டு செல்ல எவருக்கும் சட்டரீதியான அனுமதி வழங்கப்படவில்லை. துப்பாக்கியானது தனிப்பட்ட பாதுகாப்பாக்காகவே தரப்படுகின்றது. அதனைப் பயன்படுத்த அதிகாரம் இல்லை. நாட்டின் சட்டம், அமைதியான நடவடிக்கைகளுக்கு எம்மால் துப்பாக்கியைப் பயன்படுத்தும் அதிகாரம் இல்லை.

இந்த நபருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம் எனத் தெரிவித்த அவர், பெண் ஒருவருக்கு நடு இரவில் தூக்குமேடையைக் காட்டச் சென்ற அவருக்கு நடு இரவில் தூக்குமேடை நினைவுக்கு வருகிறது என்றால், தூக்குமேடையில் எவ்வாறு தூக்கிலிடுவார்கள் என முயற்சி செய்து பார்க்க, சிறை அதிகாரிகள் அவருக்கு ஏற்பாடுகளை செய்து கொடுத்திருக்கலாம். அப்போது எல்லாப் பிரச்சினையும் தீர்ந்திருக்கும் என்றார்.

# லொஹானுக்கு எதிராக முறைப்பாடு

இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முன்னாள் இராஜாங்க அமைச்சர், இந்த மாதம் 12ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் சென்று, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 கைதிகளை சிறைச்சாலைகளுக்கு மத்தியில் இழுத்து வந்து, மண்டியிட வைத்ததுடன், இதில் தமிழ் அரசியல் கைதிகளான தர்சன் மற்றும் சுலக்ஷன் ஆகிய இருவரையும் முழந்தாளிடச் செய்து தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்திய சம்பவம் மிகவும் மோசமானதாகும்.

குறித்த கைதிகள் தேசிய ரீதியில் இடம்பெற்ற சம்பவங்களின் சாட்சியாளர்கள். எனவே, இவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு சிறைச்சாலைகள் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எனினும் அவ்வாறான பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல், இச்சம்பவம் தொடர்பில், சிறைச்சாலைகள் ஆணையாளர் அவ்வாறான சம்பவம் ஒன்று பதிவாகவில்லை என பொறுப்பற்ற முறையில் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தின் பின்னர், சம்பந்தப்பட்ட இராஜாங்க அமைச்சர் அதனை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், இச்சம்பவம் நடந்து 24 மணிநேரமாகியும் சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு தெரியாது என்பது மிகவும் மோசமான விடயமாகும்.

எனவே, இந்தச் சம்பவம் குறித்து தெரிந்தும் அது தொடர்பில் சட்டநடவடிக்கை

**“ தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுக்கமைய, சிறைக்கைதிகளைப் பார்வையிட அவர்களது சட்டத்தரணிகளுக்கே அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், இராஜாங்க அமைச்சர் தனது குழுவினருடன் சென்றுள்ளமை வியப்பளிக்கின்றது**

எடுக்காமல் இந்தச் சம்பவத்தை ஆணையாளர் மறைக்க முயற்சித்துள்ளமை அதைவிட மோசமான விடயமாகும்.

இதற்கு முன்னரும் சிறைச்சாலைக்குள் கைதிகள் கொல்லப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது கைதிகளின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையில், தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுக்கமைய, சிறைக்கைதிகளைப் பார்வையிட அவர்களது சட்டத்தரணிகளுக்கே அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், இராஜாங்க அமைச்சர் தனது குழுவினருடன் சென்றுள்ளமை வியப்பளிக்கின்றது.

தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு இராஜாங்க அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தாலும் அவருக்கு எதிராக எவ்வித சட்டநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அதேபோல் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்கள் தொடர்பில் விசாரணைகளோ இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன், அவர்கள் கைதுசெய்யப்படவும் இல்லை என, முன்னிலை சோஷலிச கட்சியின் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தகுதியே இல்லாதவர்

நம்பிக்கைகுரிய நபரும் இல்லை சுட்டிக்காட்டியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பக்கச்சார்ப்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு பரிந்துரைத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ரஜீவ் அமரசூரியவினால் கையொப்பமிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்த கடிதத்தில்,

லொஹான் ரத்வத்த தொடர்ந்தும் அரசாங்கத்தின் பதவியில் இருப்பதை கேள்விக்கு உட்படுத்தியுள்ள சட்டத்தரணிகள் சங்கம், சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து கடுமையாக விரக்தியடைந்துள்ளது. சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து லொஹான் ரத்வத்த விலகியிருந்தாலும் இரத்தினக்கல் ஆபரண தொழில்துறை இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து விலகவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்தமை, அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்து அங்கிருந்த கைதிகளை மிரட்டியமை தண்டனைக்குரியதும் சட்டவாட்சிக்கு ஓர் அச்சுறுத்தலுமாகும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“ இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், புரியப்பட்டுள்ள இக்கடுமையான தண்டனைக்குரிய குற்றச்செயல்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என சட்டமா அதிபர், சட்ட அமலாக்கல் அதிகாரிகள் உள்ளடங்கலான அனைத்து துறைசார் அதிகாரிகளிடத்திலும் கேட்டுக்கொண்டுள்ளது**

இராஜாங்க அமைச்சருக்கான நம்பிக்கையை அவர் இழப்பது மட்டுமன்றி, பாராளுமன்றத்தில் எந்தவொரு தலைமை பொறுப்புகளையும்

**“ வெலிக்கடை சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்தமை, அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்து அங்கிருந்த கைதிகளை மிரட்டியமை தண்டனைக்குரியதும் சட்டவாட்சிக்கு ஓர் அச்சுறுத்தலுமாகும். இத்தகைய செயல்களானவை முழுமையாகவும் பாரபட்சமின்றியும் விசாரிக்கப்படவேண்டியவை. அவை நிரூபிக்கப்பட்டால் நீதிமன்ற தண்டனைக்குரிய நடவழக்கைக்கு உள்ளாக்கப்படவேண்டும்**

ஏற்றுக்கொள்ளும் தகுதியை அவர் இழக்கின்றார்.

இத்தகைய செயல்களானவை முழுமையாகவும் பாரபட்சமின்றியும் விசாரிக்கப்படவேண்டியவை. அவை நிரூபிக்கப்பட்டால் நீதிமன்ற தண்டனைக்குரிய நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், கைதிகளின் பாதுகாப்பு குறித்து பலமுறை நினைவுப்படுத்தி உள்ளது.

தனது இராஜினாமா முடிவால் லொஹான் ரத்வத்த, தனது நடத்தைக்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளார். அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் வகிப்பதற்கான தனது உரிமையையும் இழந்துள்ளார் என சுட்டிக்காட்டியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், புரியப்பட்டுள்ள இக்கடுமையான தண்டனைக்குரிய குற்றச்செயல்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என சட்டமா அதிபர், சட்ட அமலாக்கல் அதிகாரிகள் உள்ளடங்கலான அனைத்து துறைசார் அதிகாரிகளிடத்திலும் கேட்டுக்கொண்டுள்ளது.

மதுபோதையில் தனது சகாக்களுடன் சிறைச்சாலைக்குச் சென்று, அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து, அதிலிருவரை முழந்தாளிடச் செய்து, தனது கைத்துப்பாக்கியை எடுத்து சுட்டுத்தள்ளிவிடுவேன் என கொலை அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாக இராஜாங்க அமைச்சர் மீது குற்றம் சுமத்துப்பட்டுள்ளது.

# புரைக்கேறி உயிரிழந்த...

இதையடுத்து, குழந்தையின் சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில், அந்தக் குழந்தைக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பெண் சிசுவை பிரசவித்த நிலையில் பெண்ணொருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார்.

அளவெட்டி வடக்கு பகுதியை சேர்ந்த 42 வயதுடைய சதீஸ்குமார் அபினினி என்ற பெண்ணே, இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் பிரசவித்ண சிசு நலமுடம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளது.

செப்டெம்பர் 8ஆம் திகதி, குறித்த கர்ப்பிணிப் பெண், உடல்நலக் குறைவு காரணமாக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு கோவிட்-19 சிகிச்சை விடுதியில், மருத்துவக் கண்காணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு அன்றைய தினமே பெண் சிசுவும் பிறந்துள்ளது.

அந்தப் பெண்ணுக்கு தொடந்து சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் (15) அவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், பருத்தித்துறை - திக்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (14) நள்ளிரவு, சடலமாக மீட்கப்பட்ட 56 வயதுடைய பெண்ணின் சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில், கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

# கடும் கட்டுப்பாடுகளுடன் தளர்வா? இன்று தெரியும்

இன்றையதினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

கொவிட்-19 தொற்றொழிப்பு செயலணியின் கூட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இன்று (17) கூடும். கடந்தவாரம் கூடியபோது, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை செப்டெம்பர் 21ஆம் திகதி அதிகாலை 4 மணிவரையிலும் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**“ போக்குவரத்து கட்டுப்பாடுகள் உள்ளிட்ட கடுமையான கட்டுப்பாடுகளுடன் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதற்கான சாத்தியக்கறுகள் அதிகமாக இருப்பதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன**

எனினும், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவதாயின் எவ்வாறான கட்டுப்பாடுகளுடன் தளர்த்த வேண்டும் என்பது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்குமாறு உரிய தரப்பினர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தனர்.

இந்நிலையிலேயே இன்றையதினம் அச்செயலணி கூடவிருக்கிறது. எனினும், நாட்டின் பொருளாதாரம் மற்றும் கொரோனா மரணங்கள், தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள சரிவை கவனத்தில் கொண்டு, போக்குவரத்து கட்டுப்பாடுகள் உள்ளிட்ட கடுமையான கட்டுப்பாடுகளுடன் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பயணிகள் கப்பல் போக்குவரத்து

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள பிரதமரின் இணைப்புச்செயலாளர் செந்தில் தொண்டமான் மற்றும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு கண்டு, நல்லுறவை வளர்ப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

**“ இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு கண்டு, நல்லுறவை வளர்ப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்**

அதுமட்டுமன்றி, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இந்திய முதலீடுகளுக்கான வாய்ப்புகள் மற்றும் பிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய கூட்டு முயற்சிகள் கிராமிய அபிவிருத்தி, மற்றும் விவசாயம், கைத்தொழில் சார் முதலீடு மற்றும் கால்நடை துறைசார் மேம்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடியுள்ளனர்.

# வெளிநாட்டு பொறிமுறை தேவையில்லை

இலங்கையின் உள்ளக நீதி கட்டமைப்புக்குள் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு உள்ளது என்றார்.

ஜனாதிபதி ஊடக மைய்யத்தில் நேற்று(16) இடம்பெற்ற ஜெனீவா குற்றசாட்டு, ஐக்கிய நாடுகளின் யோசனை மற்றும் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை தொடர்பில் இடம்பெற்ற தெளிவுப்படுத்தல் ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், மனித உரிமைகளைப் பாதுகாப்பது, நல்லிணக்கத்தை பேணுவது மற்றும் பயங்கரவாதத்தை ஒழிப்பது போன்ற அரசாங்கத்தின் பொறுப்பு குறித்து ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவை மகிழ்ச்சி வெளிப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையிடும் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாட்டை, சீனா, ரஷ்யா, ஜப்பான், வடகொரியா, தென்கொரியா, பாகிஸ்தான், ஈராக், வெனிசுவேலா உள்ளிட்ட 15 நாடுகள் கைகளை கோர்த்து எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்,ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் விசேடமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை வழங்கப்பட வேண்டும் என சில மதத் தலைவர்கள் எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் தனது உரையில் குறிப்பிட்டதாகத் தெரிவித்த ஜயநாத் கொலம்பகே, அந்த உரையில் மற்றுமோர் இடத்தில் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையதாக கைதுசெய்யப்பட்டு ள்ளவர்களுள் சிலர் விடுதலை செய்யப்பட வேண்டும் என தெரிவித்ததாகக் குறிப்பிட்டதுடன்,எனவே இது ஒரே கதையின் இரட்டை நிலைப்பாடு என்றார்.

# யாழில் பிறந்த யுவதி நோர்வே எம்.பியானார்

தற்போது 33 வயதான ஹம்சாயினி, நோர்வோயில் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# மகளிரை வலுவூட்ட அமெரிக்கா நிதியுதவி

சர்வதேச முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக SDB வங்கி, DFCC வங்கி மற்றும் NDB வங்கி உள்ளிட்ட இலங்கை வங்கிகளுக்கு U.S. International Development Finance Corporation (DFC) வழங்கும் 265 மில்லியன் டொலர் நிதியின் ஒரு பகுதியாக இது வழங்கப்பட்டுள்ளது என அமெரிக்க தூதரகத்தால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துப்பாக்கி முனையில் கைதிக்கு அச்சுறுத்தல்:

# சுயாதீன விசாரணை வேண்டும்

## ஐ.தே.க கோரிக்கை



சிறைச்சாலைக்குள் நுழைந்து, கைதியின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டியமை ஒரு தண்டணை அளிக்கக்கூடிய குற்றச் செயல் எனத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, அமைச்சுப் பொறுப்பிலிருந்து விலகினாலும், குற்றச்சாட்டிலிருந்து விலக முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கைதியை மிரட்டிய சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது சிறைச்சாலைகளின் பொறுப்பு. எனினும் சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலைக்கு சென்று, அங்குள்ள கைதியின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டும் நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இலங்கை தண்டனைக் கோவை சட்டத்தின்படி இதுவொரு தண்டனை அளிக்கக்கூடிய குற்றச்செயல். சிறைச்சாலைகள் ஆணையாளர், பொலிஸார் இணைந்து இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மீறல் தொடர்பில் இலங்கை மீது தொடர் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் தற்போதைய சூழ்நிலையில், இராஜாங்க அமைச்சர் ஒருவரே மனித உரிமை மீறல்களைச் செய்வதால் நாட்டு மக்களுக்கு அது பாதிப்பாக அமையும்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் அமைச்சில் 50 பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்து, அவர்களுக்கு புதிதாக வாகனங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

“இரண்டு வேளை உண்ணுங்கள்”;

# “நான் கூறவே இல்லை”

## ஜகத் குமார எம்.பி விளக்கம்



நாட்டு மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், தேர்தல் நடத்த வேண்டுமெனக் கோரும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, சடலங்களுக்கு மத்தியில் அதிகாரத்தைக் கைப்பற்றப் பார்ப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஏ.டி.ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

சிரமங்களுக்கு மக்கள் முகங்கொடுத்து வரும் நிலையில் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கும் எதிர்க்கட்சி தலைவருக்கு மக்கள் எதிர்காலத்தில் பதிலளிப்பார்கள் எனவும் தெரிவித்த அவர், மூன்று வேளை உணவுக்கு சிரமப்படும் ஏழை மக்களுக்கு நிவாரணங்களை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தான் அண்மையில் கூறிய கருத்தை திரிபுப்படுத்தி, நாட்டு மக்கள் இரண்டு வேளை மாத்திரம் உணவை உட்கொள்ள வேண்டுமென தான் கூறியதாகக் கூறி எதிர்க்கட்சிகள் தனக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

மூன்று வேளை மாத்திரமல்ல; நான்கு வேளைகளும் மக்களுக்கு உணவளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மஹிந்தவே முதலில் சர்வதேசத்துக்கு சென்றார்



நாட்டுக்குள் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கிய அரசாங்கம், சர்வதேசத்திலும் இலங்கையை பாரிய நெருக்கடிகுள் தள்ளுவதாகவும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்தில் நல் றவை பேணிய இலங்கைக்கு, எதிர்காலத்தில் ஏற்படும் ஆபத்துகளைக் குறைக்க வேண்டுமெனவும் அவர் அரசாங்கத்திடம் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கையின் பிரச்சினைகளை எடுத்துச் செல்வதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. உண்மையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 1989ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கையின் பிரச்சினைகளை முதலில் எடுத்துச் சென்றதாகவும் தெரிவித்தார்.

உள்நாட்டுப் பிரச்சினையை முதன்முதலில் சர்வதேசத்துக்கு மஹிந்த ராஜபக்ஷவே கொண்டு சென்றார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கொள்கைகளுக்கு அமைய இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுமாக இருந்தால், அது தொடர்பில் எவரும் ஐ.நாவில் முறையிடலாம் எனவும் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து அண்மையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது கூறினார்.

ஒட்டமாவடி

# கொவிட் அடக்கஸ்தலம் தொடர்பில் பல கோரிக்கைகள்

மொஹொமட் ஆஸிக்

ஒட்டமாவடி தேசிய கொவிட் அடக்கஸ்தலத்துக்கு மாற்றீடாக மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் மாவட்டங்களிலிருந்து பல கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளரும் கொவிட்-19 தொற்று நோய் தலைமை ஒருங்கிணைப்பாளருமான வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஒட்டமாவடி தேசிய கொவிட் அடக்கஸ்தலத்தில் இதுவரை 2,802 கொவிட் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. 1,501 முஸ்லிம்களின் சடலங்களும் 160 இந்துக்கள், 88 பௌத்தர்கள், 53 கத்தோலிக்கர்களின் சடலங்களுமே இவ்வாறு அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுமார் 2,000 உடல்கள் இங்கே அடக்கம் செய்யப் போதியதாக இருப்பதாகவும் மாற்று வழியாக. மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் மாவட்டங்களிலிருந்து பல கோரிக்கைகள் வந்துள்ளன. இந்தக் கோரிக்கைகள் அப்பகுதியின் செயலாளர்கள் மூலம் சமர்பிக்கப்படட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அமர்வு நாள்கள் குறைக்கப்பட்டாலும்

# பாராளுமன்ற அமர்வுகள் தொடர்ந்து நடைபெறும்

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் சுகாதாரப் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கவனத்திற்கொண்டு, பாராளுமன்ற அமர்வு நாள்கள் குறைக்கப்பட்டிருந்தாலும், வளமையான பாராளுமன்ற அமர்வுகள் தொடர்ந்து நடைபெறும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டின் நூற்றாண்டு கொண்டாட்டத்தில் இணையவழியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்த உரையாற்றிய அவர், ஆசியாவிலேயே பழைமையானப் பாராளுமன்றம் இலங்கை பாராளுமன்றம். பல்வேறு மத, பல்லின சமூகத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில், மதிப்புமிக்க பாடங்களை இந்தியாவின் சட்டப்பேரவை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றியதையும் சுட்டிக்காட்டிய அவர், இது இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளைப் பலப்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

தகவலறியும் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் பாராளுமன்ற குழுக்களின் செயற்பாடுகளை அறிக்கையிட ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறலுக்கு வழிவகுக்கக் கூடிய வகையில் பாராளுமன்ற ஜனநாயகத்தை பலப்படுத்தும் முறையை நோக்கிய நடவடிக்கையாக இது அமைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்

# வாகன நெரிசலை குறைக்கத் திட்டம்



கொழும்பில் ஏற்படும் வாகன நெரிசல்களை குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகருக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினந்தோறும் 19 இலட்சம் மக்கள், 6 இலட்சம் வாகனங்களும் வருவதாக கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பவித்ரா, இதனாலேயே கொழும்பு, அதனை அண்மித்த பிரதேசங்களில் கடுமையான வாகன நெரிசல்கள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

அதிகமான வாகனங்கள் கொழும்புக்கு வருவதால் கொழும்பில் காற்று மாசுப்பாடு அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தம்பியை தாக்கிக் கொன்ற அண்ணன் கைது



பண கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட பிரச்சினைகளால் அண்ணனால் தாக்கப்பட்ட தம்பி உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கெஸ்பேவ, மாகந்தன பிரதேசத்தைச் சேர்ந்த ரங்கன அல்விஸ் என்கிற 41 வயதுடைய நபரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகவும், தனது சகோதரனால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் 3 நாள்கள் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இம்மாதம் 12ஆம் திகதி பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தனது அண்ணனுடன் பேசுவதற்காக தனது மனைவியுடன் உயிரிழந்த நபர் வந்துள்ளார். வாய்த்தர்க்கம் அதிகரித்து, பின்னர் அது மோதலாக மாறியதில் தம்பி அண்ணனால் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்கலுக்குள்ளான உயிரிழந்த நபர், கடந்த 14ஆம் திகதி பிலியந்தல மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக களுபோவில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, உயிரிழந்த நபருக்கு பி.சி. ஆர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அறிக்கை கிடைத்ததும் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படுமெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெமட்டகொடையில்

# பொலிஸார் மீது கல் வீச்சுத் தாக்குதல்

## நால்வர் கைது

தெமட்டகொடையில் காலிபுல்ல வத்த பிரதேசத்தில் போதைப்பொருள் சுற்றிவளைப்புக்காக சென்றிருந்த பொலிஸ் குழு மீது, கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்ட நால்வர் போதைப்பொருள்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்த 10 கிராம் 200 மில்லிகிராம் போதைப்பொருளையும் பொலிஸார் மீட்டுள்ளதோடு, கல் வீச்சு தாக்குதலால் காயமடைந்த இரு பொலிஸார், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் குழு, போதைப்பொருள் வர்த்தகர்களை கைது செய்ய முயற்சித்தபோது அவர்களை பொலிஸாரிடமிருந்து தப்பிக்க வைப்பதற்காக, பொலிஸார் மீது 20 பேர் கல்வி வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸாரை தாக்கிக் காயமடையச் செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தியாகதீபம் திலீபன் நினைவேந்தலுக்கு

# நீதிமன்றம் தடை

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நினைகூருவதற்கு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம், நேற்று முன்தினம் (15) தடைஉத்தரவு பிறப்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை மேஜர் தியாகராசா சரவணபவன், தமிழரசு கட்சி இளைஞர் அணி செயலாளர் கிருஷ்ணபிள்ளை சேயோன், பேரின்பராசா ஜனகன், சுவீகரன் நிசாந்தன் ஆகிய 4 பேருக்கு எதிராகவே தடையுத்தரவு பிறப்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நால்வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திலீபனின் நினைவு கூரும் நடவடிக்கையை, நேற்று 15ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதிவரை மேற்கொள்ள உள்ளதாக பொலிஸ் நிலைய புலனாய்வு உத்தியோகத்தர்களால் நம்பகரமான தகவல் கிடைத்ததாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி பொ.ப.கஜநாயக்கா, மட்டக்களப்பு



நீதவான் நீதிமன்றுக்கு அறிவித்தார்.

இவ்வாறான நிகழ்வு நடந்தால் இதற்கு எதிரானவர்களால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவாய்ப்பு இருப்பதால் மற்றும் நாட்டில் தற்போது கொரோனா தாக்கம் அதிகரித்துள்ளதன் காரணமாக நினைவு கூரல் நடவடிக்கையை நடைபெறாமல் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு மன்றுக்கு அறிக்கை செய்தனர்.

இதன் பிரகாரம், பொலிஸாரால் மன்றுக்கு கோப்பிடப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம், 15ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரையில் மேற்கொள்ள தீர்மானித்திருக்கும் மேற்படி நடவடிக்கையை தடுத்து நிறுத்தும் பொருட்டு, தடை உத்தரவு பிறப்பித்து கட்டளை பிறப்பித்துள்ளது.

வெடுக்குநாறி மலைப்பகுதியில் அதிகளவான

# இராணுவ பிரசன்னம்

## ஆதி லிங்கேஸ்வரரை அழிக்கத் திட்டம் என மக்கள் தெரிவிப்பு

■ க. அகரன்

வவுனியா - நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் கோவில் பகுதியில், அதிகளவான இராணுவ பிரசன்னம் காணப்படுவதாகத் தெரிவித்த பிரதேச மக்கள், அங்குள்ள சில விக்கிரகங்களும் அண்மையில் சேதப்படுத்தப்பட்டிருந்ததாகவும் கூறினர்.

இந்த் விடயம் தொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அப்பகுதி மக்கள், ஆதி லிங்கேஸ்வரர் கோவிலுக்குள் அப்பகுதி மக்கள் செல்ல முடியாதென்று, தொல்பொருள் திணைக்களம் தடை விதித்து வரும் நிலையில், வழக்கு விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன எனவும் கூறினர்.

இந்நிலையில், ஊர் மக்கள் ஆதி லிங்கேஸ்வரர் கோவிலுக்குச் செல்லாத நிலையில், அங்குள்ள பல விக்கிரகங்களை தொல்லியல் திணைக்களம் அழித்துள்ளதாக



தாம் சந்தேகிப்பதாகத் தெரிவித்த அப்பகுதி மக்கள், அத்துடன,; பல விக்கிரகங்களும் சூலங்களும் காணாமல் போயுள்ளன எனவும் கூறினர்.

இந்தச் சூழலில், தற்போது கோவிலை நோக்கி பௌத்த தேரர்கள் அமரும் கதிரை உட்பட பல பௌத்த பொருள்கள் இராணுவத்தினரால் உழவியந்திரங்களில், எடுத்துச் செல்லப்படுகின்றன எனவும், மக்கள் சுட்டிக்காட்டினர்.

'எமது கோவிலை பௌத்த மயமாக்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நாம் எண்ணுகின்றோம். இது தொடர்பில் அரசியல் தலைவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்' எனவும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதார திணைக்கள அலுவலகர்களின்

# இடமாற்றம் செப்.21 அமுல்



■ சகா, எம்.எஸ்.எம்.ஹனீபா

கொரோனா தொற்றுக் காரணமாக இவ்வாண்டு ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்தவிருந்த இடமாற்றங்கள், இம்மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.


திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை மற்றும் அம்பாறை போன்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு கடிதம் மூலம் இடமாற்றம் தொடர்பாக அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது இடமாற்றம் வழங்கிய புதிய நிலையத்துக்குச் சென்று கடமைகளை பொறுப்பேற்றுக்கொள்ளுமாறும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் கையொப்பமிட்ட கடிதம், அனைத்து நிறுவன தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்ற சபையின் முடிவுகளை EP.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.





# அழகில் மகிழ்ச்சி

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை, ஒலுவில், அட்டாளைச்சேனை, மத்திய முகாம், நாவிதன்வெளி, சவளக்கடை மற்றும் சம்மாந்துறை பகுதிகளில் மயில் கூட்டங்களின் வருகை அதிகரித்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் வெளாண்மை செய்கை அறுவடை நிறைவடைந்துள்ள நிலையில், பெரும்போக செய்கை ஆரம்பமாக உள்ளது. இந்நிலையில், வயல் வெளிகளில் உள்ள விசஜந்துக்களான பாம்புகள், பூராண்கள், தேள்கள் மற்றும் விசப்பூச்சிகளின் தொல்லை, மயில்கூட்டங்களின் வருகையால் குறைவடைந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (படங்கள் – பாறுக் ஷிஹான்)

அட்டாளைச்சேனையில்

# மினி சூறாவளி



■ எம்.ஏ.றமீஸ்

அட்டாளைச்சேனை, கோணாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (15) மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக, அப்பகுதியின் கரையோரப் பிரதேசங்களில் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

கோணாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சில மீனவ வாடிகள், மீனவ குடிசைகளின் கூரைகள் பலத்த காற்றின் காரணமாக சுக்குநூறாகியுள்ளன.

மீனவக் குடிசைகளில் இருந்த பெறுமதி மிக்க கடற்றொழில் உபகரணங்களும் சேதமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, கோணாவத்தை பிரதேசத்தில் உள்ள சில வீடுகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

அஷ்ரஃப்பின் ஈடேற்றத்துக்காக

# 'தலைவர் தின' துஆப் பிரார்த்தனை

■ பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர், சர்ஜுன் லாபீர், எம். என். எம். அப்ராஸ், எம்.எம்.ஜபீர்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப்பின் 21ஆவது நினைவு தினத்தையொட்டி, கத்தமுல் குர்ஆனும் துஆப் பிரார்த்தனை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹரிஸின் கல்முனை மக்கள் பணிமனையில், நேற்று (16) நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம் ரோஸன் அக்தார், ஏ.சி.ஏ சத்தார்,எம். எஸ் நிசார் (ஜேபி), ஏ.எம் பைறோஸ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களான தேசமாணிய ஏ.பி ஜௌபர், பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரிஸின் இணைப்புச் செயலாளர் நௌபர் ஏ. பாவா, மௌலவி. டி நௌபர் அமீன் (வாஹிதி), மௌலவி எம்.எம் ஜமாலுடின் (ஹாஸிமி) மற்றும் கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மறைந்த பெருந் தலைவர் அஷ்ரஃப்பின் வாழ்க்கை வரலாறு பற்றி, கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ரோஸன் அக்தார், எம்.எஸ் நிஸார்(ஜே.பி), ஏ.சி.ஏ சத்தார் ஆகியோர்களால் நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டதுடன், மறைந்த தலைவர் அஸ்ரப்பின் மறுமை வாழ்வின் ஈடேற்றத்துக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் நடைபெற்றது.




திலீபனின்

# நினைவேந்தல் அனுஷ்டிப்பு

■ செந்தூரன் பிரதீபன்

தியாக தீபம் திலீபனின் (இராசையா பார்த்தீபன் ) 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, அவர் உயிர் நீத்த யாழ்., நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் தூபியில், நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில், கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ், கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



# யானையின் உடலம் மீட்பு



■ க. அகரன்

வவுனியா - ஓமந்தை, மாளிகை பகுதியில், யானையின் உடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் யானையின் உடலம் ஒன்றை அவதானித்த அப்பகுதி மக்கள், அது தொடர்பாக பொலிஸாருக்கும் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கும் தகவல் வழங்கினர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாருக்கும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும், யானையின் உடலத்தை மீட்டுள்ளதுடன், விசாரணையையும் முன்னெடுத்து வருகின்றனர்.

# அடிக்கல் நாட்டும் நிகழ்வு



■ எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் தாதியர் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பதில் அத்தியட்சகர் வே.கமலநாதன் தலைமையில், நேற்று (16), காலை 11 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில், வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வே.கமலநாதன், நிர்வாக உத்தியோகத்தர் வான்மதி ஜெயதாஸ், தாதிய பரிபாலகி குமுதமலர் ரவீந்திரன், வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

60 மில்லியன் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராஜகிராமத்தில் மோதல்

# 15 பேருக்கு எதிராக வழக்கு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் - நெல்லியடி, இராஜகிராமத்தில், இரு கோஷ்டிகளுக்கிடையில் நேற்று முன்தினம் (15) இரவு இடம்பெற்ற மோதலில், 15 பேர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் அவர்கள் மீது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கும் பதிவு செய்யப்பட்டு ள்ளது. நேற்று முன்தினம் இரவு, இரு கோஷ்டிகள் மோதலில் ஈடுபட்டிருக்கின்றன.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த பொலிஸார், மோதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகத்தின் பேரில், 15 பேரை கைது செய்துள்ளதுடன், அவர்களிடம் வாக்குமூலத்தை பதிவு செய்துவிட்டு, பொலிஸ் பிணையில் விடுதலை செய்துள்ளனர்.

கொரோனா அபாயம் காரணமாகவே, அவர்களுக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டதாகவும் இருந்தபோதும், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளர் பொலிஸார் தெரிவித்தனர்.

தரிசு நிலங்களை சுயதொழிலுக்காக

# தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்குக

## முன்னாள் பிரதி நீதியமைச்சர் வேண்டுகோள்

ஆ.ரமேஸ்

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை, காடாக்கி காட்டு மிருகங்களின் வாழ்விடமாக உருவாக்குவதை விடுத்து, சுயத்தொழில் மேற்கொள்ள தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்குவது சிறந்தது என முன்னாள் பிரதி நீதியமைச்சர் வீ.புத்திரசிகாமணி தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அவர்,

இன்று மலையக பெருந்தோட்டப்பகுதிகளில், பெருந்தோட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்கள் பல வெறுமனே தரிசு நிலங்களாகி, காடுகளாக காட்சியளிக்கின்றன.



இவ்வாறாக தோற்றமளிக்கும் இடங்களை, இன்றைய பொருளாதார நெருங்கடி காரணமாகவும் நாட்டில் நிலவும் சுகாதாரம் தொடர்பான முடக்க காலப்பகுதிகளில் தொழில் இழந்துள்ள தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பிரித்து வழங்கி, அதில் பசு வளர்ப்பு மற்றும் விவசாயம் உள்ளிட்ட சுய தொழிலுக்காக வழங்கி ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

மேலும், இக்காலகட்டத்தில் கால்நடை வளர்ப்பு ,விவசாயம் போன்ற தொழிலை கௌரவ தொழிலாக நவீனமயப்படுத்தி, அதில் தோட்ட சமூகத்தினரை ஈடுப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர்களது பொருளாதாரமும் சீராகும்.

இதற்கான சிந்தனைகளை வளர்த்து மக்கள் பிரதிநிதிகள்,மலையக அமைச்சர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து தீர்வு பெற்றுக்கொள்வது சிறந்த விடயமாகும் என தான் சுட்டிக்காட்டுவதாக மேலும் தெரிவித்தார்.

ஒரு இலட்சம் மில்லி லீற்றர்

# கோடாவுடன் ஐவர் கைதாகினர்

எஸ்.சதீஸ்

பொகவந்தலாவ பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் ஐந்து பேரை, பொகவந்தலாவ பொலிஸார் நேற்று முன்தினம் (15) கைது செய்துள்ளனர்.

பொகவந்தலாவ- ஒல்டி தோட்டம் மற்றும் கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்டப் பகுதிகளில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கசிப்பு உற்பத்திக்காக பயன் படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைபற்றியுள்ளதோடு, சந்தேக நபர்களிடம் இருந்து ஒரு இலட்சம் மில்லி லீற்றர் கோடாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



மஸ்கெலியா வைத்தியசாலையை அண்மித்த பகுதிகள்

# பராமரிப்பின்றி கைவிடப்பட்டுள்ளன

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளில் உரிய பராமரிப்பின்றி காணப்படுவதாக, இங்கு சிகிச்சைக்காக வருகைத் தரும் நோயாளர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இதற்கமைய, வைத்தியசாலையை அண்மித்த பகுதிகள் பராமரிப்பின்றி பற்றைக்டுகளாக மாறியுள்ளதாகவும் இதனால் இங்கு வனவிலங்குகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்றும் வைத்தியசாலை பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் வைத்தியசாலைக்குச் செல்லும் பிரதான வீதியும் குன்றும் குழியுமாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதேப்போல் குறித்த வைத்தியசாலைக்கு விரைவாக நடந்துச் செல்லக் கூடிய சிறிய வீதியும் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக சுட்டிக்காட்டுகிறனர்.

அண்மை சில நாட்களாக மலையகத்தில் பெய்து வரும்



அடைமழையால், குறித்த வீதியில் புற்கள் வளர்ந்து காடுகளாக மாறியுள்ளதாகவும், இதனை துப்புரவு செய்யும் கடமை மஸ்கெலியா பிரதேச சபை பணியாளர்களுக்கு உள்ள நிலையில், அவர்களும் இதனை துப்புரவு செய்யாமல் கைவிட்டுள்ளனர்.

எனவே இந்த விடயம் குறித்து மஸ்கெலியா பிரதேசசபை கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 108 சங்காபிசேக பூஜை...

நுவரெலியா – ஆவேலிய ஸ்ரீ நகர் கருமாரியம்மன் கோவிலின், 108 சங்காபிசேக பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றன. சுகாதார வழிமுறைகளுக்கமைய, ஆலய பிரதான குருவான நிசாந்தன் குருக்கள் தலைமையில், இந்த பூஜை நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.( பி.கேதீஸ்)

பதுளை மாவட்டத்தில்

# 360 கொரோனா மரணங்கள்

எம். செல்வராஜா,தனராஜா

பதுளை மாவட்டத்தில் இதுவரை 360 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக , பதுளை மாவட்ட கொரோனா ஒழிப்பு தடுப்பு செயலணியினர் தெரிவித்தனர்.

இதற்கமைய, வெலிமடை- 50 பேர், பதுளை 47 பேர், பண்டாரவளை -45 பேர், ஹாலிஎல-39 பேர், மஹியங்கனை -38 பேர், ஹப்புத்தளை -29பேர், பசறை -29 பேர், ஊவா பரணகம -23 பேர், ஹல்துமுள்ளை- 15 பேர், லுணுகலை- 11 பேர், ரிதிமாலியத்த- 11 பேர், எல்ல- 8பேர், மீகாகிவுல - 8 பேர், சொரணாதொட்ட -06

**பதுளை மாவட்டத்தில் இதுவரையில் 24 ஆயிரத்து நூற்று அறுபத்தொன்பது (24169) பேர், கொரோனா தொற்றுக்குள்ளா கியுள்ளதுடன், , 4,582 பேர், சுய தனிமைப்படு த்தப்பட்டுள்ளனர்.**

பேர், கந்தகெட்டிய- 4 பேர் என இதுவரை 360 பேர், மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பதுளை மாவட்டத்தில் இதுவரையில் 24 ஆயிரத்து நூற்று அறுபத்தொன்பது (24169) பேர், கொரோனா தொற்றுக்குள்ளா கியுள்ளதுடன், , 4,582 பேர், சுய தனிமைப்படு த்தப்பட்டுள்ளனர்.

# பத்தனை ஆற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

எஸ்.கணேசன்



திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெவோன் நீர்வீழ்ச்சிக்கு, நீர் வழங்கும் பத்தனை ஆற்றிலிருந்து, ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் கொட்டகலை வூட்டன் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஏ.தங்கவேல் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், கடந்த 9ஆம் திகதி முதல் காணாமல் போய்விட்டதாக பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையிலேயே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எனினும், குறித்த ஆணின் மரணம் தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நுவரெலியா நீதிமன்ற நீதிவானின் மரண விசாரணைகளின் பின், சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில்

# இடைநடுவில் கல்வியை கைவிடும் தமிழ் மாணவர்கள்

உமாமகேஸ்வரி

கொரோனா தொற்று காரணமாக நாடு முடக்கப்பட்டு பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ள நிலையில், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெரும்பாலான மலையக மாணவர்கள் தமது கல்வியை இடை நடுவில் கைவிடும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டதில் உள்ள சுமார் 100 தமிழ் மொழி மூல பாசாலைகளில், 80 சததவீதமான பாடசாலைகள் தோட்டப்பகுதியிலுள்ள பாடசாலைகளாகும்.

இம்மாணவர்களில் பெரும்பாலான மாணவர்களுக்கு கைப்பேசி உள்ளிட்ட போதிய தொழிற்நுட்ப சாதனங்கள் இல்லாத நிலையில், அவர்கள் நிகழ்நிலையில் (ஒன் லயின்) கல்வி கற்க முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது ஆசிரியர்கள் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுத்துள்ளதால், பெரும்பாலான மாணவர்கள் தமது நிகழ்நிலை கல்வியை தொடர முடியாமல் வீடுகளிலேயே முடங்கி போய் இருக்கின்றனர்.

இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்தி சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்கள், இம்மாணவர்களிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி, அவர்களை தமது தேயிலை தோட்டத்திற்கு வேலைக்கு அழைத்து செல்கின்றனர்.

அத்துடன், தொழிற்சாலைகளுக்கும் சில மாணவர்கள் இரவு நேர வேலைக்கு செலகின்றனர்.

பொருளாதார சுமைக்காரணமாக சில தோட்ட தொழிலாளர்களும் தமது பிள்ளைகள் வேலைக்கு செல்வதனை அனுமதிக்கின்றனர்.

இந்நிலை தொடருமானால், இம்மாவட்டத்தில் எதிர்காலத்தில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரிக்கும் அபாய நிலை தோன்றுமென சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாத்தளை மாவட்டத்தின் அபிவிருத்தி

# பணிகளை விரைவுப்படுத்த நடவடிக்கை

மஹேஸ் கீர்த்திரத்ன

கொரோனா தொற்றால் மாத்தளை மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், குறித்த அபிவிருத்தி திட்டங்களை விரைவாக நிறைவு செய்ய அனைத்து அதிகாரிகளும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாவட்ட அபிவிருத்தியின் தேர்ச்சி, மாவட்டம் மற்றும் மாகாண நிதியத்தின்



கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்தல், தடுப்பூசி நடவடிக் மற்றும் கொரோனா ஒழிப்பு செயற்பாடு உள்ளிட்டவை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ராத்தங்கொட தோட்டத்தில்

# அறுபது குடும்பங்கள் குடிநீரின்றி அவதி

நவி

ஹேவாஹேட்ட- ராத்தங்கொட தோட்டத்தில் வாழும் சுமார் 60 குடும்பங்கள் தமக்கான குடிநீர் வசதியை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

**தற்போது குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் நீரின் தேவையும் அதிகரித்துள்ளது தமக்கான குடிநீர் திட்டத்தை ஏற்படுத்திக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்**

ஆரம்பத்தில் சுமார் 25 குடும்பங்களே அங்கு வசித்து வந்துள்ள நிலையில், தற்போது குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் நீரின் தேவையும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், குறித்த 60



குடும்பங்களும் அப்பகுதியில் உள்ள ஊற்று நீரையே தமது தேவைக்காகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

எனினும் தற்போது ஊற்றிலிருந்து வரும் நீரின் அளவு குறைந்துள்ளதால், 60 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குடிநிரின்றி அவதியுறுகின்றனர்.

எனவே, தமக்கான குடிநீர் திட்டத்தை ஏற்படுத்திக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

யோகட் வாங்கினால் பால்மா:

# நுகர்வோருக்கு அழுத்தம் விடுத்த வர்த்தகருக்கு சிக்கல்

பாலித ஆரியவன்ஸ

ஆறு யோக்கட்டுகளை கட்டாயமாக வாங்கினால் மாத்திரமே ஒரேயொரு பால்மா பக்கட் தரப்படும் என, நுகர்வோருக்கு அழுத்தம் விடுக்கும் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் ஒருவருக்கு எதிராக, வழக்குத் தொடரவுள்ளதாக பதுளை மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நேற்று (16) தியத்தலாவை நகரில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்ட போதே, நுகர்வோருக்கு அழுத்தம் விடுத்த வர்த்தகர் ஒருவர் சிக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் போது, அந்த வர்த்தக நிலையத்திலிருந்து 6 பால்மா பக்கட்டுகள் வழக்குபொருளாக நுகர்வோர் அதிகாரசபையின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளதுடன், நிபந்தனையுடன் பொருள் விற்பனை என்ற குற்றச்சாட்டின் கீழ் குறித்த உரிமையாளருக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அண்மையில் பால் மாவுக்கு கடுமையான தட்டுப்பாடுகள் ஏற்பட்டன. இதனையடுத்து சில நகரங்களில், ஐஸ் கிறீம் செய்யும் பால்மா வகை, சிறிய,சிறியதாய் பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

மலையகத்தில் மட்டுமன்றி, நாட்டின் பல பாகங்களிலும் ஐந்து அல்லது ஆறு யோகட் கோப்பைகளை கொள்வனவு செய்தால் மட்டுமே ஒரு பக்கெற் பால்மா பக்கட் விற்பனைச் செய்யப்படுகின்றது.

# குடும்பமாகக் கிளம்பி மீண்டும் 'கும்மி' அடித்துவிடாதீர்கள்

நடை பழகும் குழந்தைகளை ஓரிரு நிமிடங்களுக்கேனும் ஓரிடத்தில் அமர்ந்திருக்கச் செய்வதென்பது ஒவ்வொரு தாய்மார்களுக்கும் குதிரை கொம்பாகவே இருக்கும். நகர்ப் புறங்களுக்குப் அப்பால், வீடுகளில் முற்றங்கள் இருப்பவர்களுக்கு அது பிரச்சினையாக இருக்காது. ஆனால், நகர்ப்புறங்களில் சின்னஞ்சிறிய வாடகை வீடுகளிலும், தொடர்மாடி குடியிருப்புகளில் வாழ்வோருக்கு, அது பெரும் சுமையாகவே இருக்கும்.

என்னதான் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தாலும், பெருந்தெருக்களில் வாகனங்களின் நடமாட்டம் அதிகரித்தே இருக்கிறது. வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார், வாகனப் போக்குவரத்தை சீர்செய்யும் அளவுக்கு வாகனங்களின் எண்ணிக்கையை காணமுடிகிறது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர், அவ்வப்போது முடக்கப்பட்ட நாடு, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தாலும் அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அதைப் பலரும் தவறாகவே பயன்படுத்திக் கொண்டுள்ளனர். அத்தியாவசிய தேவைகள் எனும் பெயரில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் சில கடைகளைப் பார்க்குமிடத்து, 'அத்தியவசியம்' எனும் சொல்லுக்கு அகராதியில் அர்த்தம் தேடவேண்டியுள்ளது.

வீடுகளிலிருந்து வேலை செய்வோர், 'எப்பதான் இதற்கு முடிவு வருமோ' என ஏக்கப்பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றனர். குடும்பமே, பல நாள்கள் வீடுகளுக்குள்ளே முடங்கிக்கிடப்பதால் பல்வேறான பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. குடும்ப வன்முறைகளுக்கும் குறைவே இல்லை. இவையெல்லாம் மனதை ஒருநிலைப்படுத்த முடியாமையால் ஏற்படும் ஒருவகையான அழுத்தங்களின் பிரதிபலிப்புகளாகும்.

அவ்வப்போது தளர்வுகள் வழங்கப்பட்டாலும் குடும்பம் சகிதம் பொது இடங்களுக்குப் படையெடுக்கும் சிலராலும், சுகாதார வழிக்காட்டல்களை பின்பற்றாதவர்களாலும், கொரோனா தடுப்பூசியை செலுத்திக் கொள்ளாதவர்களாலும் கொரோனா வைரஸ் தொற்றின் வேகம் அதிகரித்தே சென்றது.

கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதன் பின்னர், ஓகஸ்ட் 20ஆம் திகதி முதல், அமல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கூடும், கொவிட்-19 தொற்றொழிப்பு ஜனாதிபதியின் செயலணியின் கூடத்தின் ஊடாக நீடிக்கப்பட்டே வருகிறது.

செப்டெம்பர் 21 ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டிருக்கும் இந்தத் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தால், கொரோனா மரணங்களும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் ஓரளவுக்கு குறைந்துள்ளன. ஆனால், மக்களின் நடமாட்டம் சற்றென அதிகரித்தும் உள்ளது. அந்தச் செயலணி இன்றும் கூடவிருக்கிறது.

ஆருடத்தின் பிரகாரம், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் சில கட்டுப்பாடுகளுடன் தளர்த்தப்படவிருப்பதாக கூறப்படுகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை கவனத்தில் கொண்டு மேற்கட்ட முடிவுகளை எடுக்கக்கூடும். அதனால், வீடுகளில் இருப்போர், குடும்பத்துடன் பொது இடங்களுக்குச் சென்று, கொரோனாவுடன் சேர்ந்து கும்மியடித்துவிடக்கூடாது.

நாடும், குடும்பமும் இயங்க வேண்டும் என்பதால், இதுவரையிலும் கடைப்பிடித்துவரும் கட்டுப்பாடுகளை இன்னுமின்னும் இறுக்கமாகக் கடைப்பிடித்து, கொரோனாவை முற்றாகத் துரத்துவதற்கு உறுதிப்பூணவேண்டுமென நாமும் கோரிநிற்கின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ஒரு 'நாணயக்கயிறு' வேண்டும்



பஸ்தியாம்பிள்ளை ஜோண்சன்

முன்னாள் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, அநுராதபுரம் சிறைச்சாலையில், வெட்கப்படத்தக்க, பொறுப்பற்ற வகையில் நடந்துகொண்டமை, ஒரு தனிமனித ஒழுக்கச் சீர்கேடான நடத்தை எனப் புறமொதுக்கி வைத்துவிட முடியாது.

சிறையில் அடைக்கப்பட்ட கைதி ஒருவரை, அவரது சட்டத்தரணியோ, உறவினரோ சந்திப்பதாயின் விருந்தினர் அறையிலேயே சந்திக்க முடியும். சிறை அதிகாரிகளைத் தவிர, வெளியார் எவரும் சிறைச்சாலை வளாகத்துக்குள் செல்ல முடியாது; பொதுவாக அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு சிறைக்கைதிகள் மறுவாழ்வு இராஜாங்க அமைச்சர் என்ற தனது பதவிவழி அதிகாரத்தின் நிமித்தம், எந்தவிதமான அலுவலக தேவையும் இல்லாமால், இரவு வேளையில், நண்பர்களுடன், மதுபோதையில் சிறைச்சாலைக்குள் நுழைந்தமை, அப்பட்டமான அதிகார துஸ்பிரயோகம் ஆகும்.

இராஜாங்க அமைச்சரின் அதிகாரம் தம்மை எதுவும் செய்துவிடலாம் என்ற அச்சத்தால், அதிகாரிகள், லொஹான் ரத்வத்தையின் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவும் சிறைச்சாலை அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்கவும் ஆரம்பத்தில், "அவ்வாறான சம்பவம் எதுவும் நடக்கவில்லலை" என்று தெரிவித்திருந்தமை, இலங்கை அரசாங்கத்துக்கே உரித்தான, எதையும் மூடி மறைக்கும் போக்கின் அடிப்படையில், கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

லொஹான் ரத்வத்தை, அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் என்ன நோக்கத்தில் நுழைந்தார் என்பதன் உண்மை வெளிவரப்போவதில்லை. அது எவ்வாறாக இருந்தாலும், லொகான் ரத்வத்தை, தமிழ்க் கைதிகளை அழைத்து, அதில் இருவரை முழந்தாள்படியிட வைத்து, ஒருவரின் கன்னத்தில் துப்பாக்கியை வைத்து, "உங்களை கொலை செய்யக்கூட என்னால் முடியும்" என்று கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

யாழ்ப்பாணம், கரவெட்டியைச் சேர்ந்த மதியரசன் சுலக்ஷன் என்ற 33 வயது கைதியே, இவ்வாறு துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர், 2009ஆம் ஆண்டில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில், வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்து.

சிறைச்சாலைக்குள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளாகவோ, விசாரனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் கைதிகளாகவோ, அல்லது எந்தவிதமான குற்றப் பத்திரிகைகளும் தாக்கல் செய்யப்படாத கைதிகளாகவோ இருக்கலாம். ஆனால், லொஹானின் செயற்பாடுகளுக்கு எதிராக, இலங்கை குற்றவியல் சட்டத்தின் கீழ் பல வழக்குகளைத் தொடுக்க இடமிருக்கிறது.

எந்தவொரு பொது இடத்தில் வைத்து, சாதாரண நபர் ஒருவர் துப்பாக்கியை எடுத்து அச்சுறுத்தல் விடுத்தால், குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்யாமல், "முறைப்பாடு கிடைக்கப்பெறவில்லை" என்று, அந்தக் குற்றச்செயலை கண்மூடி புறக்கணித்து விடமுடியுமா? ஆனால், பொது மக்கள் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகர அவ்வாறான கருத்தொன்றையே தெரிவித்து, நடவடிக்கை எடுக்காமல், காப்பாற்றும் போக்கொன்றையே கடைப்பிடிக்கின்றார்.

எனவே, லொஹான் ரத்வத்தை சிறைச்சாலையில் நடந்து கொண்ட விதமானது, இந்த நாட்டின் சிறுபான்மையினரை அடிமைகளாக எண்ணும், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மனநிலையையே அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

முக்கியமாக, லொஹானின் செயற்பாடு, இந்த அரசாங்கத்தில் உ ள்ள பெரும்பான்மையான அரசியல்வாதிகளின் மனநிலையை ஒத்ததாக, 'ஒருபானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம்' என்பதுபோல் காணப்படுகின்றது.

சிங்கள - பௌத்தர்களே இந்நாட்டின் முதன்மைக் குடிகள்; அவர்கள், இந்த நாட்டில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்; எதை வேண்டுமானாலும் செய்யலாம்; அவர்கள் எந்தவகையான சட்ட விதி முறை மீறல்களிலும் ஈடுபடலாம். அதை எவரும் தட்டிக் கேட்கக் கூடாது. அவ்வாறு, இவர்களின் சிறுபான்மையினருக்கு எதிரான செயல்களை கேள்விக்கு உட்படுத்தினால், இலங்கையின் இறைமைக்கு எதிரானவர்கள்; துரோகிகள் எனப் பிரசாரப்படுத்தப்பட்டு, இல்லாமல் ஆக்கப்பட்டு விடுவார்கள். இத்தகையதொரு போக்கே இலங்கையின் தேசிய அரசியலில் நிலவுகின்றது.

அதனால்த்தான், எதிர்க்கட்சியும் கூட, அதன் தலைவர் சஜித் பிரேமதாஸ அநுராதபுர சிறைச்சாலை சம்பவத்துக்கு எதிராக, பொதுவாக வார்த்தை ஜாலங்களால் கண்டித்திருந்தாரே தவிர, ஆக்கபூர்வமாக, சட்டரீதியில் நடவடிக்கை எடுக்கப்போவதாகவோ, எடுக்கப்படவேண்டும் என்றோ குறிப்பிடவில்லை. அவ்வாறு, சிங்கள பௌத்த பேரினவாத போக்கை, ஓரளவுக்கு மேல், தடுக்க முனைபவர்களின் அரசியல் வாழ்க்கை, தெற்கில் அஸ்தமிக்கச் செய்யப்படும் அளவுக்கு, பேரினவாதக் கட்டமைப்பு பலம்கொண்டதாகக் காணப்படுகின்றது.

சிறுபான்மையினருக்கு எதிராக, துப்பாக்கியை எடுத்து கொலை அச்சுறுத்தல் விடுப்பது, ஜனநாயகத்துக்கும் இலங்கையின் இறைமைக்கும் ஏற்ற செயல் என்று, ஒரு மக்கள் கூட்டம் நம்பவைக்கப்பட்டு, அந்த மக்கள் கூட்டத்தால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களாலேயே அவர்கள் வழிநடத்தப்படுகின்றார்கள்; இந்த நாடு வழிநடத்தப்படுகின்றது. இது, சிறுபான்மை மக்களின் எதிர்காலம் குறித்து பல கேள்விகளை எழுப்புகின்றது.

லொஹான் ரத்வத்த என்ற தனி நபரை எடுத்துக்கொண்டால், அவர், கண்டி சிங்கள, பௌத்த வழிவந்த மேட்டுக்குடியின் வாரிசாவார். இவருடைய தந்தையார் அநுருத்த ரத்வத்தை, கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமேயாக சிறிது காலம் இருந்துள்ளார். ரத்வத்தையின் தந்தையர் ஹரிஸ் லூக் ரத்வத்தையும் கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமேயாக நீண்டகாலம் பதவிவகித்துள்ளார். கண்டி, தலதா மாளிகையின் தியவதன நிலமே என்பது, இலங்கை அரசியலில் மிகஆழமாக ஊடுருவும் வல்லமை கொண்ட பௌத்த பீடமொன்றின் பதவியாகும்.

இவ்வாறு, சிங்கள தேசிய அரசியல் செல்வாக்கும், பௌத்த பீடத்தின் செல்வாக்கும் கொண்ட ஒருவரின் செயற்பாட்டை கேள்விக்கு உட்படுத்துவது, பாரதூரமான விளைவுகளைத் தரும் என்ற அச்சம் சிங்கள - பௌத்த பேரினவாத தளத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல்வாதிகளிடம் காணப்படுகின்றமை, லொஹானின் சம்பவத்தில் இருந்து தெளிவாகின்றது.

தமிழ்த் தேசிய கட்சிகள் உட்பட, சிங்கள புத்திஜீவிகள், நல்லிணக்க அமைப்புகள், உலக நாடுகள், சர்வதேச அமைப்புகள் என உலகமே லொஹானின் நடவடிக்கையைக் கண்டிக்கின்றன. ஆனால், அவர், "அரசாங்கத்தை சங்கடப்படுத்த விரும்பாத காரணத்தாலேயே, தான் முன்வந்து இராஜினாமா செய்ததாகவும் சிறைச்சாலை தன்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது, அது ஒரு பெரிய நெருப்புக் குவியலாக இருந்ததாகவும், குறுகிய காலத்தில் தீயை அணைத்து, சிறையை ஒரு நிலையான இடத்திற்கு கொண்டு வர முடிந்தது என்றும் எனவே, தான் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறை மறுவாழ்வு இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வதில் மகிழ்ச்சி அடைவதாகவும் தனது இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

லொகான் ரத்வத்தை, கண்டி மாவட்டத்தில் இருந்து, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டவர். கண்டியில் 10 முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்ட சம்பவம், துப்பாக்கியை காட்டி சுற்றியுள்ள அனைவரையும் பயமுறுத்தி, வானத்தை நோக்கி சுட்ட பல சம்பவங்கள் அவருக்கு எதிராகப் பதிவாகியுள்ளதுடன் சிறைத்தண்டனையையும் அனுபவித்துள்ளார். இத்தகைய பாரிய குற்றச் செயல்கள் புரிந்தவர் எனக் குற்றஞ்சாட்டையும் பின்புலங்களையும் கொண்ட ஒருவருக்கு, தேசிய பட்டியல் நியமனம் வழங்கியமை என்பது, அந்தக் கட்சி, எத்தகைய பாதையில் அரசாங்கத்தை வழிநடத்திச் செல்கின்றது என்பதை வெளிப்படுத்தியது.

லொஹான் ரத்வத்த, பாராளுமன்றத்தின் நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் பதவிவகிக்கின்றார். இவர் சிறைச்சாலைகள் அமைச்சிலிருந்து மாத்திரமே இராஜினாமாச் செய்துள்ளார் என்பது கவனத்துக்குரியது. அவருடைய ஏனைய பதவிகள் அனைத்திலும் தொடர்ந்து நீடித்து வருகின்றார். அவர் இராஜினாமாச் செய்யாத இராஜாங்க அமைச்சுப் பதவிகளின் மூலம், இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கான சிறப்புரிமைகளை தொடர்ந்தும் அனுபவித்து வருவார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நடைபெற்று வரும் காலப்பகுதியில், பேராசிரியர் பீரிஸால் உருவாக்கப்பட்ட இலங்கை மீதான ஒரு கவசத்தை, லொஹானின் இந்தச் செயற்பாடு சுக்குநூறாக்கியுள்ளது. அதனால், சிறைக் கைதிகளுக்கு அச்சுறுத்தலான சூழ்நிலையை இராஜினாமாவுடன் மூழ்கடிக்கும் விதத்திலேயே அவரின் இராஜினாமா அமைந்துள்ளது.

கைதிகள் அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பாக, லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவிலும் பொலிஸ் தலைமையகத்திலும் முறைப்பாடு செய்துள்ளதாக சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் சிறைச்சாலையின் சி.சி.டி.வி காட்சிகளை அழிக்க பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறைக் கைதிகள் தங்களது சட்டத்தரணிகள் ஊடாக முறைப்பாட்டை பதிவு செய்து, சட்டரீதியாக இந்தச் சம்பவத்தை அணுகுவது குறித்தும் பரிசீலிக்க வேண்டும். தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள், தமது உறுதியான நடவடிக்கைகளை வெளிப்படுத்த வேண்டும். அதுவும், கட்டுமீறி தறிகெட்டு ஓடும் சிங்களப் பேரினவாதத்துக்கு ஒரு 'நாணயக்கயிறு' ஆக அமையவும் வாய்ப்பு ஏற்படும்.



## வாழ்வியல் தரிசனம்

இந்த உலகில் கோடானு கோடி மக்கள், பூமித்தாயின் மடியில் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்கள். இவர்களில் பலவிதமான குணாதிசயங்களைக் கொண்டவர்களும் இருக்கின்றார்கள்.

இவர்களில், உங்களை நேசிப்பவர்களிலும் உங்களுக்கு அருகில் இருப்பவர்களிலும், யாரோ ஒருவர் உங்கள் நெஞ்சத்தை நோகடித்துவிட்டால், நீங்கள் அதன் பொருட்டு, தீவிரமான கவலையில் ஆழ்ந்து போதுவது சரியானது அல்ல!

உங்களை வலுப்படுத்த வேண்டிய நிலையில், அந்த ஒருசிலரின் செயலுக்காக, நீங்கள் பெரிதுபடுத்தத் தேவையில்லை. எவரையும் அவமதிக்க எவருக்கும் உரிமையில்லை.

மனவுறுதியை நிலையாக வைத்திருக்க வேண்டிய நீங்கள், எதிரிகளின் போக்கை உடைத்தெறிய வேண்டும். அதற்காக சண்டையிடத் தேவையில்லை; கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும். தேவையற்ற தர்க்கம் கூடாது. துணிவு நிலையில் தளம்பலாகாது. அதை நிரந்தரமாக வைத்திருங்கள். அதுவே உச்ச மகிழ்ச்சி நிலை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மருதோடையில் கல் அகழ்வதற்கு எதிர்ப்பு

வவுனியா பிரதேச செயலகப் பிரிக்குட்பட்ட மருதோடை குளத்தில் கல் அகழ்வதற்கு அனுமதி கோரியமையால், அப்பிதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மருதோடை, வேலர் சின்னக்குளத்துக்கு அருகாமையில் ஏற்கெனவே, அரசியல்வாதி ஒருவரின் ஆதரவில், 100 அடிக்கும் கூடுதலாக கல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கல் அகழப்பட்ட பகுதியில், 80 அடிக்கும் மேலாக நீர் தேங்கி உள்ளதுடன், இவ் இரு குளங்களுக்குமான நீர்வரத்து குறைவடைந்து, குளங்களின் நீர் வற்றும் நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்குளத்தின் கீழ், 120 ஏக்கர் வயற்காணி காணப்படுவதுடன், இருபோக பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்த நிலையில், தற்போது ஒருபோக பயிர்ச்செய்கை கூடச் செய்யவதற்கு, நீர் பற்றாக்குறையாக உள்ளது.

அத்தோடு, இவ்வாறு ஆழமாக கல் அகழ்வதால் இதற்கு அருகாமையில் உள்ள 60 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் கிணறுகளிலும் நீர் வற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே இயங்கிய கற்குவாரி நிறுத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது இக்குளத்தின் அலகரை பகுதியில் உள்ள கற்களை அகழ்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதுடன் அப்பகுதியை கல் உடைப்பதற்காக துப்புரவு செய்யும் பணிகள் ஆரப்பிக்கப்பட்டமையால் இப்பிரதேச மக்களுக்கும் குறித்த பகுதியினருக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டது. தற்போது, கல் அகழ்வதற்கான அனுமதியை, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாஸனால் மறுக்கப்பட்டது.

க. அகரன்



# பிரத்தியேக ஆயுள் காப்புறுதித் திட்டங்களை வழங்க அலியான்ஸ் மற்றும் ஹட்ச் கைகோர்ப்பு




அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா, ஹட்ச் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவுத் திட்ட வாடிக்கையாளர்களுக்கு Smart Protection எனும் பிரத்தியேகமான ஆயுள் காப்புறுதித் திட்டத்தை வழங்குவதற்காக ஹட்சிசன் டெலிகொம்யூனிகேஷன் லங்காவுடன் ஒரு கூட்டு ஒப்பந்தத்தில் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளது.

மிகவும் கட்டுபடியான கட்டணத் திட்டத்தினை கொண்ட குறிப்பிடத்தக்க ஏராளமான நன்மைகளுடன் வழங்குவதுடன், அத்திட்;டமானது மரணத்தின் போது இழப்பீடு கிடைக்கும் அனுகூலத்தைக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களின் அடிப்படையில், ரூ. 4.50 எனும் சிறு தொகையினை தினசரி கட்டுப்பணத்தை செலுத்துவதனூடாக, மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது தினசரி கொடுப்பனவு நன்மை மற்றும் டெங்கு பணக்கொடுப்பனவு நன்மை போன்ற பல சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஹட்ச் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவுத் திட்ட வாடிக்கையாளர்கள் தங்களது ஹட்ச் மொபைல் இணைப்புக்களில் இருந்து 226 ஐ டயல் செய்வதன் மூலம் தங்களை இதற்காக பதிவு செய்து இந்த காப்புறுதித் திட்டங்களை இலகுவான வழியில் அலியான்ஸ் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

'காலத்திற்கேற்ப விரைவாக இடம்பெற்று வருகின்ற மாற்றங்களை உள்வாங்கி, எமது செயற்பாடுகள் அனைத்திலும் புத்தாக்கத்தை மையமாகக் கொண்டு செயற்படுவதை அலியான்ஸ் லங்கா தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. இந்த திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஹட்ச் வாடிக்கையாளர்கள் தாங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளோம் என்ற நினைப்புடன் மிகுந்த மன நிம்மதியை அனுபவிப்பார்கள் என்று நம்புகிறோம். அவர்களின் வாழ்க்கையையும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கையையும் பாதுகாக்க இந்த வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்,' என்று அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ஜெயலால் ஹேவாவசம் குறிப்பிட்டார்.

'இந்த திட்டத்தின் அறிமுகமானது, வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ற உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கி, மிகச் சிறந்த மதிப்புள்ள உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம் என்ற ஹட்ச் நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை மீண்டும் ஒரு முறை காண்பித்துள்ளது. அலியான்ஸ் உடனான எங்கள் கூட்டாண்மை மூலம், ஹட்ச் வாடிக்கையாளர்களுக்கு மன நிம்மதி மற்றும் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் வகையில் கட்டுபடியான கட்டணங்களுடன் காப்புறுதித் திட்டத்தை சௌகரியமாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம். எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகள் ஹட்ச் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அதி முக்கியமானவை. வேகமாக வளர்ந்து வரும் எங்கள் வாடிக்கையாளர் தளத்திற்கு இந்த காப்புறுதித் திட்டம் உண்மையிலேயே பயனளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்,' என்று ஹட்ச் நிறுவனத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரியான ரம்ஸீனா மோர்செத்லை குறிப்பிட்டார்.

# இணையத்தளத்தினூடாக செலான் டிக்கிரி சிறுவர் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம்

SEYLAN BANK PLC
The bank with a heart
SEYLAN Tikiri
A WORLD OF BENEFITS FOR THE LITTLE ONES

செலான் வங்கி, சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் டிக்கிரி கணக்கை இணையத்தளத்தினூடாக ஆரம்பிக்கும் வசதியை அறிமுகம் செய்துள்ளது. வங்கியின் இளம் வாடிக்கையாளர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெருமளவு பாதுகாப்பு மற்றும் சௌகரியம் ஆகியவற்றை உறுதி செய்யும் அதேநேரம் சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் குறைந்தளவு தொடர்புகளை பேணி இலகுவாக கணக்கை ஆரம்பிக்கலாம்.

வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் வங்கித் தீர்வுகளை வழங்குவதில் செலான் வங்கி முன்னோடியாகத் திகழ்கின்றது. வாடிக்கையாளர்கள் தமது வங்கித் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக கிளைக்கு விஜயம் செய்யும் தேவையை குறைத்துக் கொள்ளும் வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பல தீர்வுகளில் பிந்திய அங்கமாக ஒன்லைன் கணக்கு ஆரம்பிப்பு அமைந்துள்ளது. தமது பிள்ளைகளுக்கு டிக்கிரி கணக்கொன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் பெற்றோருக்கு, செலான் வங்கியின் இணையப்பக்கத்தைப் பார்வையிட்டு, புதிய கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய முடியும். வாடிக்கையாளர் பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் கையொப்பமிட்டு, தாம் விரும்பிய கிளை ஒன்றிலிருந்து தமது சேமிப்புப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் குறைந்த காலத்தையே செலவிட வேண்டியிருக்கும். இது, சிறுவர்களின் சேமிப்புப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு வழிகோலும்.

தொழில்நுட்ப மேம்படுத்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்றவற்றில் வங்கி தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வரும் நிலையில், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக எழுந்துள்ள பல சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க உதவியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் வங்கிச் சேவைகளை ஒப்பற்ற வகையில் அனுபவிக்கக்கூடிய வகையில் பிரத்தியேக டேட்டா சென்ரரை அண்மையில் அறிமுகம் செய்திருந்தது. இலங்கையின் வியாபாரங்களை ஒன்லைன் கொடுப்பனவுகளுடன் இணைத்து வலுவூட்டும் வகையில் PayHere உடன் கைகோர்த்திருந்தது. அண்மையில் வங்கி முன்னெடுத்திருந்த #ResponsibleMe திட்டத்துக்காக பொது மக்களிடமிருந்து பெருமளவு வரவேற்பைப் பெற்றிருந்தது. கொவிட்-19 தொற்றுப் பரவும் சூழலில் அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, சுய விழிப்புணர்வு மற்றும் தனிநபர் பொறுப்புக்கூறல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்தியிருந்தது.

செலான் டிக்கிரி கணக்கினூடாக இளம் வாடிக்கையாளர்களுக்கும், பெற்றோருக்கும் பெருமளவு அனுகூலங்கள் வழங்கப்படுகின்றது. கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக நாடு முழுவதையும் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வங்கியியலுக்கு அப்பாலான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு செலான் வங்கி தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளது.

புதுச்சேரி

தீபாவளிக்கு சலுகை பெற

# தடுப்பூசி சான்று கட்டாயம்

தீபாவளி பண்டிகைக்கு அரசு அறிவிக்கும் சலுகைகள் பெறுவதற்கு தடுப்பூசி சான்றிழ் கட்டாயம் தேவை என்று துணைநிலை ஆளுநர் தமிழிசை தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக நாளொன்றுக்கு 100 கிலோமீற்றர் தூரம் சைக்கிள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய விமானப் படை வீரர்களை ஆளுநர் மாளிகையில் இருந்து ஆளுநர் தமிழிசை, நேற்று (16) கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

அதையடுத்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:


" நூறு சதவீத தடுப்பூசி போடும் இலக்கை ஒக்டோபர் 2 ஆம் திகதிக்கு எட்ட திட்டமிட்டுள்ளோம். தடுப்பூசி போடுவதை ஊக்கப்படுத்த ஏற்பாடு செய்துள்ளேன்.

அரசு சலுகைகள், மாணவர்கள் தேர்வு எழுதுவது முதல், தடுப்பூசி போட்டுக்கொண்ட சான்றிதழ் இல்லையென்றால் அரசின் நலத்திட்டங்கள் போன்றவை கிடைப்பதற்கு இனி கடுமையான பாதிப்பு ஏற்படும். அரசு ஊழியர்கள் ஊதியம் பெற தடுப்பூசி சான்றிதழ் அவசியம் என்பதை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.



புதுடெல்லி

# தினமும் 77 பலாத்கார வழக்குகள் பதிவு



கடந்த ஆண்டில் நாடு முழுவதும் தினமும் 77 பலாத்கார வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 28 ஆயிரத்து 46 பலாத்கார வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறான குற்றங்கள் 2019 இல் 7.2 சதவீதமாக இருந்த நிலையில் 2020இ ல் 6.7 சதவீதமாக சரிந்துள்ளது.

2020 இல் நாடு முழுவதும் மொத்தம் 28,046 பலாத்கார வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில், 28 ஆயிரத்து 153 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் . தினசரி 77 பலாத்கார வழக்கு என்ற கடந்தாண்டு பதிவாகியுள்ளது . இதில் பாதிக்கப்பட்டவர்களில் 25,498 பேர் 18 வயதை கடந்தவர்கள், 2,655 பேர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள், சிறுமிகள் ஆவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



சேலம்

# கழன்ற டயர் மோதியதில் 'நீட் தேர்வு' மாணவன் காயம்

அரச பஸ்ஸிலிருந்த கழன்ற டயர் மோதி விபத்தை ஏற்படுத்தியதில், தந்தைக்குக் கால் முறிவு என்பட்டதுடன், நீட் தேர்வு எழுத்துவதற்குச் சென்ற அவரது மகனுக்குக் கைகளில் காயம் ஏற்பட்டுள்ளது.

சேலம் உடையாப்பட்டி அருகே தனியார் பள்ளியில் நீட் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டிருந்தது.

தேர்வு எழுதப்போகும் மகன் கணேசனை அழைத்துக்கொண்டு அவரது தந்தை சேலத்துக்கு வந்துள்ளார். வரும் வழியில், விழுப்புரத்தில் இருந்து சேலம் நோக்கி அரச பஸ்ஸொன்று வந்து கொண்டிருந்தது.

இந்நிலையில், பஸ்ஸின் பின் சக்கரங்களில் ஒன்று, திடீரெனக் கழன்று ஓடி, வீதியோரம் நடந்து சென்று இவ்விருவர் மீது மோதியது. தந்தைக்கு கால்களில் முறிவு ஏற்பட்டது. மகனுக்கு கைகளில் காயம் ஏற்பட்டது. எனும் மகனை தந்தை நீட் தேர்வுக்கு அனுப்பிவைத்தார்.

சென்னை

என்னைப் பற்றி பேசுபவர்களின் வீட்டில்

# என்னைப் போல பெண் இருந்திடக் கூடாது



சீரியலில் நடித்துக் கொண்டிருக்கும் போது கூட விஜே தீபிகா இவ்வளவு பிரபலம் ஆகவில்லை. ஆனால் சீரியலில் இருந்து விலகியதற்கான காரணத்தை தெரிந்த பிறகுதான் பெரும் பிரபலமாக மாறிவிட்டார். பாண்டியன் ஸ்டோர் சீரியலில் இவரை ஐஸ்வர்யாவாக நடித்துக் கொண்டிருக்கும்போது இவரைப் பற்றி குறை கூறியவர்கள் எல்லாம் தற்போது நாம் பேசியதால் அடுத்தவர்களின் மனதை எந்த அளவில் பாதித்திருக்கும் என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

விஜே தீபிகா தற்போது பலருடைய ரோல்மாடலாக மாறிவிட்டார். தன்னுடைய தன்னம்பிக்கையையாலும் மன தைரியத்தாலும் அனைவருக்கும் முன்னுதாரணமாக இருக்கிறாராம்.

ஷூட்டிங்குக்காக மேக்கப் போடுவதால் ஏற்பட்ட சைட் எஃபெக்ட் காரணமாக முகத்தில் வந்த பருக்களை காரணம் காட்டி விஜே தீபிகா சீரியலில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறார். அவருக்கு பதிலாக இப்பொழுது சாய் காயத்ரி அந்த ரோலில் நடித்து வருகிறார்

புதுச்சேரி

# 220 முறை தோற்ற "தேர்தல் மன்னன்" மீண்டும் வேட்புமனு

புதுச்சேரியின் தேர்தல் மன்னன் பத்மராஜன் 221ஆவது முறையாக புதுச்சேர் மாநிலங்களவைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்தார். தேர்தலில் தான் தோற்றால் மகிழ்ச்சி எனவும் 62 வயதான அவர் தெரிவித்தார்.

, இதுவரை தேர்தலில் வைப்புத்தொகைக்காக ரூ.50 இலட்சம் வரை செலவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

1988 ஆம் ஆண்டு முதல் பல தேர்தல்களில் வேட்புமனுத் தாக்கல் செய்வது வழக்கம். குறிப்பாக உள்ளாட்சித் தேர்தல் தொடங்கி, நகராட்சி, சட்டப்பேரவை, பாராளுமன்ற மக்களவைத், மாநிலங்களவை, குடியரசுத் தலைவர் தேர்தல்கள் வரைப் பல்வேறு தேர்தல்களில் பல முறை போட்டியிட்டுள்ளார்.

ஆனால், எதிலும் அவர் வெற்றி பெற்றதில்லை. தோல்வியைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து தேர்தலில் போட்டியிட்டு வருகிறார். வேட்புமனுத் தாக்கலுக்காகவே லிம்கா, கின்னஸ் புத்தகங்களிலும் இடம் பெற்றுள்ளார். இதனால் தேர்தல் மன்னன் பத்மராஜன் எனவும் அழைக்கப்படுகிறார்.

மறைந்த முதல்வர்கள் கருணாநிதி, ஜெயலலிதா உள்ளிட்ட முக்கியத் தலைவர்களை எதிர்த்துப் போட்டியிட்டுள்ளார். இந்நிலையில் அவர், 221 ஆவது முறையாக புதுச்சேரி மாநிலங்களவைத் தேர்தலில் சுயேச்சையாக வேட்புமனுத் தாக்கல் செய்தார்.



அமெரிக்கா

சீனாவுக்கு எதிராக

# 3 நாடுகள் கூட்டணி


இந்தோ- பசிபிக் கடல் பகுதியில் சீனாவின் அதிகாரத்தைக் கட்டுக்குள் கொண்டு வர அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகள் பாதுகாப்புக் கூட்டணி அமைத்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.
பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர்களுடன் ஜோ பைடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையிலையே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

AUKUS என்ற இப் புதிய கூட்டணி இந்தோ பசிபிக்கை பாதுகாப்பான பிரதேசமாக மாற்றும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு அணு ஆயுதம் தாங்கி நீர்மூழ்கிக் கப்பல் படையை உருவாக்குவது இக்கூட்டணியின் முதல் செயல்திட்டமாக உள்ளதாகக் கூறப்படுகின்றது.



அமெரிக்கா

## கடலுக்கு அடியிலும் கூகுள்




நியூயோர்க்கில் இருந்து பிரித்தானியா மற்றும் ஸ்பெயின் வரை, கடலுக்கு அடியில், 3,900 மைல் நீளமுள்ள கிரேஸ் ஹொப்பர்( Grace Hopper) இன்டர்நெட் கேபிள் போடும் பணியை கூகுள் நிறுவனம் நிறைவு செய்துள்ளது.

இத்திட்டத்தை கடந்த 2020 ஆம் ஆண்டு கூகுள் நிறுவனம் அறிவித்தது.

நியூயோர்க்கில் இருந்து ஆரம்பிக்கும் இக்கேபிளின் மறு முனை பிரித்தானியாவின் மேற்குக் கடற்கரையான கார்ன்வெல்லில் தரையைத் தொட்டது. ஜூலை மாதம் நிறைவடைய வேண்டிய இப் பணி சற்று தாமதமாகி உள்ளது, கேபிளின் மற்றொரு முனை ஏற்கனவே ஸ்பெயினின் பில்பாவோ நகரில் கரையை தொட்டுள்ளது.

இதன் மூலம் வினாடிக்கு 340 முதல் 350 டெராபைட்ஸ் டேட்டாக்களை கொண்டு செல்ல முடியும்.

அதாவது, சுமார் ஒன்றே முக்கால் கோடி பேர் ஒரே நேரத்தில் 4000 வீடியோக்களைக் காண்பதற்கான டேட்டா பரிமாற்றம் நடக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

## பலூன் ஒன்றினால் ஸ்தம்பித்த நகரம்



பலூன் ஒன்றினால் நகரமொன்று மின்சாரமின்றி ஸ்தம்பிதம் அடைந்த சம்பவம் கடந்த 13 ஆம் திகதி ஜேர்மனியின் டிரெஸ்டன் (Dresden) நகரில் இடம்பெற்றுள்ளது.

இதனால் சுமார் 3 இலட்சம் குடியிருப்புகள், மருத்துவமனைகள், நிறுவனங்கள் எனப் பல பகுதிகள் பாதிப்படைந்ததாகவும்,

அதோடு போக்குவரத்து விளக்குகள், டிராம் போக்குவரத்து ஆகியன செயலிழந்து போனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மின்சாரத் தடைக்கான காரணம் என்ன எனத் தெரியாமல் அதிகாரிகள் திணறிய நிலையில், இதுகுறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன்போது மின்சாரத்தடைக்கான காரணம் ஒரு பலூன் எனத் தெரியவந்துள்ளது.

பலூன் ஒன்றில் சுற்றப்பட்டிருந்த உலோகம் பூசப்பட்ட பகுதி மின்சாரம் பகிர்ந்தளிக்கும் முக்கிய பகுதியில் மோதியதாலேயே இச்சம்பவம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ள நிலையில் இது திட்டமிட்ட செயலா அல்லது தற்செயலாக நடந்ததாக என்பது குறித்துப் பொலிஸார் விசாரணை செய்து வருகிறார்கள்.

அமெரிக்கா

## ஆடைகளில் அரசியல்



அமெரிக்காவின் பிரபல ஃபேஷன் ஷோ நிகழ்ச்சியான மெட் காலா (Met Gala) கடந்த 13 ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடைபெற்றது.

உலகப் புகழ் பெற்ற இந்நிகழ்ச்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நடிகைகள், நடிகர்கள், மொடல்கள் எனப் பிரபலங்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு அரசியல் அர்த்தம் பொருந்திய உடைகளை பிரபலங்கள் அணிந்து வந்தமை தற்போது பேசுபொருள் ஆகியுள்ளது.

குறிப்பாக அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினரான அலெக்சாண்ட்ரியா ஒகாசியோ (Alexandria Ocasio )அணிந்து வந்த. ஆடையின் பின்புறம் பொறிக்கப்பட்டிருந்த ‘செல்வந்தர்களுக்கு வரி விதிப்பீர் ‘ (Tax The Rich) எனும் வாசகம் அமெரிக்காவில் விவாதத்தைக் ஏற்படுத்தியுள்ளது.

அந்நாட்டில் பொதுவாகவே செல்வந்தர்களுக்கு வரி விதிக்க வேண்டும் எனும் கோரிக்கை பல ஆண்டுகளாக சமூக செயற்பாட்டாளர்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது.



இந்நிலையில் அலெக்சாண்ட்ரியாவும் இவ்வாறு ஆடை அணிந்து வந்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த அலெக்சாண்ட்ரியா, ‘எல்லா வகுப்பு மக்கள் மத்தியிலும் இச் செய்தியைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே எனது நோக்கம்’ எனக் கூறியுள்ளார்.

அதேபோல் பிரபலமான கிம் கர்தாஷியனின் (Kim Kardashian) உடையும் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.
கறுப்பின மக்கள் மீதான வன்முறையை எதிர்த்தும், கறுப்பின மக்களுக்கு ஆதரவளிக்கும் விதமாகவும் அவர் தலை முதல் முழு உடலையும் மறைக்கும் விதமாக கறுப்பு உடை அணிந்து கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## விண்வெளிக்குச் சுற்றுலா சென்ற நால்வர்



விண்வெளிச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் சார்பில் முதன் முதலாக பொதுமக்களில் நான்கு பேர் விண்வெளிக்குச் சென்றுள்ளனர்.

இதற்காக ஷிப்ட் 4 பேமன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஜாரிட் ஐசக் மேன் என்ற கோடீஸ்வரர் தலைமையில் 4 பேர் கொண்ட குழுவினர் அமெரிக்காவின் புளோரிடாவின் கேப் கேனவரலில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் அவர்கள் டிராகன் காப்ஸ்யூலில் அமர வைக்கப்பட்டிருந்தனர். அடுத்த சில நிமிடங்களில் ஸ்பேஸ் எக்ஸ் ரொக்கெட் விண்ணில் சீறிப் பாய்ந்தது.

தற்போது விண்ணுக்குச் சென்றுள்ள இந்நால்வர் 3 நாட்கள் விண்வெளியில் இருப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது



சம்பியன்ஸ் லீக் குழுநிலைப் போட்டிகள்

# வென்றிருக்காத பரிஸ் ஸா ஜெர்மைன்

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரின் குழுநிலைப் போட்டிகளில், பெல்ஜியக் கழகமான கிளப் புருகேயின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுக்கும் இடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அன்டர் ஹெரேராவும், புருகே சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹன்ஸ் வனகென்னும் பெற்றிருந்தனர்.

இதேவேளை, இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் றொட்றிகோ பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட் வென்றது.

துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில்

## எட்டாமிடத்துக்கு முன்னேறிய டி கொக்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் எட்டாமிடத்துக்கு தென்னாபிரிக்காவின் குயின்டன் டி கொக் முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 153 ஓட்டங்களைப் பெற்றதைத் தொடர்ந்தே 12ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தை டி கொக் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

டேவிட் மலான், 2. பாபர் அஸாம், 3. ஆரோன் பின்ஞ், 4. விராட் கோலி, 5. டெவோன் கொன்வே, 6. லோகேஷ் ராகுல், 7. மொஹமட் றிஸ்வான், 8. குயின்டன் டி கொக், 9. எவின் லூயிஸ், 10. ஹஸரத்துல்லா ஸஸாய்.

பாகிஸ்தான் எதிர் நியூசிலாந்து தொடர்

## இன்று ஆரம்பிக்கிறது



பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, ராவல்பின்டியில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

கேன் வில்லியம்ஸன், றொஸ் டெய்லர், ட்றெண்ட் போல்ட், கைல் ஜேமிஸன், லொக்கி பெர்கியூசன், டிம் சௌதி ஆகியோர் இல்லாத நிலையில் பலவீனமானதாகவே நியூசிலாந்து காணப்படுகின்றது.

அந்தவகையில், டொம் லேதம், ஹென்றி நிக்கொல்ஸ், வில் யங் உள்ளிட்டவர்களையே துடுப்பாட்டம் பெரும்பாலும் தங்கியுள்ளது.




கரீபியன் பிறீமியர் லீக்

## சம்பியனானது பற்றியொட்ஸ்

மேற்கிந்தியத் தீவுகளின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் சென். கிட்ஸ் மற்றும் நெவிஸ் பற்றியொட்ஸ் சம்பியனாகியுள்ளது.

சென். கிட்ஸில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சென். லூசியா கிங்ஸுடனான இறுதிப் போட்டியில் வென்றே பற்றியொட்ஸ் சம்பியனாகியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கிங்ஸ்

கிங்ஸ்: 159/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரஹீம் கொர்ன்வோல் 43 (32), றொஸ்டன் சேஸ் 43 (40), கீமோ போல் 39 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: நசீம் ஷா 2/26 [4], பவாட் அஹ்மட் 2/32 [4], பேபியன் அலென் 1/17 [4])

பற்றியொட்ஸ்: 160/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டொமினிக் ட்ரேக்ஸ் ஆ.இ 48 (24), ஜோஷுவா டா சில்வா 37 (32), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட் 25 (22), பேபியன் அலென் 20 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: றொஸ்டன் சேஸ் 1/17 [3], கெஸ்ரிக் வில்லியம்ஸ் 1/29 [4], அல்ஸாறொ ஜோஸப் 1/22 [3])

போட்டியின் நாயகன்: டொமினிக் ட்ரேக்ஸ்

தொடரின் நாயுகன்: றொஸ்டன் சேஸ்

உலகக் கிண்ணத்தை

## தவற விடும் குசல்?

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரை இலங்கையின் முன்னாள் அணித்தலைவரான குசல் பெரேரா தவற விடலாம் எனப்படுகிறது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில் பின்தொடைத் தசைநார் காயத்துக்கு உள்ளானமையை அடுத்தே உலகக் கிண்ணத்தை பெரேரா தவற விடலாம் எனப்படுகிறது.

இதேவேளை, உலகக் கிண்ணத்திலிருந்து இலங்கையின் சகலதுறைவீரர் லஹிரு மதுஷங்க காயம் காரணமாக விலகியுள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 17 செப்டெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.